திரு. கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, இந்த களி மண்ணால் பொம்மைகள் செய்யப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் இப்படிப்பட்ட மண் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் பட்ட இடங்களிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசு ஆவனசெய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் அமைத்திருப்பது டிரெயினிங்-கம்-புரடக்ஷன் சென்டர். இதிலே பயிற்சி கொடுக்கப் படுகிறது. வேறு எங்காவது தொடங்கலாம் என்று யாராவது முன் வந்தால் அவர்களுக்கு உதவி செய்யலாம்.

மாமல்லபுரம் அரசினர் சிற்பக்கலைப் பயிற்சிப் பிரிவு

*301 வினா—திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாமல்லபுரத்திலுள்ள அரசினர் சிற்பக்கலைப் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகையை ரூ. 60-5-75 என்ற விகிதத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இப்பள்ளியில் படித்துத் தேறுகின்றவர்களுக்கு தேவஸ் தானங்களில் சிற்பிகளாக பணிபுரியும் வேலைவாய்ப்புக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(உ) செங்கல் கலைக் கட்டடத்துறையிலும், சுதையிலிருந்து பிம்பங்கள் செய்யும் துறையிலும் இம்மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாத உதவித் தொகையை ரூ. 60 ஆக எல்லா மாணவர்களுக்கும் உயர்த்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ஆம்.

(உ) ஆம்.

வேலூர் தாலுக்கா, சதுப்பேரி குளத்திற்கு வரும் கால்வாயைத் தூர் எடுத்தல்

*302 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, வேலூர் தாலுக்காவில் இருக்கும் சதுப் பேரிக்கு மழைக் காலத்தில் பாலாற்று நீரைக் கொண்டு வரும் கால் வாயை மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?